மேற்கொண்டால் காவேரி ஆற்றில் சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு பம்ப்செட்ஸ் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கமுடியும். அதை அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படி யோசனை ஒன்றுமில்லை. உறுப்பினர் சொன்னதெல்லாம் அவர்கள் சொல்கிற செய்தியை இப்போதுதான் கேள்விப்படுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இயற்கையாகவே அந்த வழியே தண்ணீர் வழிந்து ஓடுகிறது, சில திட்டங்களிலிருந்து. நீர் பிடிப்பு இருக்கிறது. அந்த நிலங்களுக்குக்கூட தண்டத் தீர்வை போடப்படுகிறது. அதுகுறித்து ஆராய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆற்றங்கரையோரங்களில் உள்ளவற்றை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டுமென்று ஒவ்வொரு போர்ட் உறுப்பினரையும் ஒவ்வொரு ஆற்றுக்கும் நியமித்திருக்கிறோம். அறிக்கை வந்த பிறகு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

**417 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி பாசனப் பகுதியைச் சேர்ந்த மணவாசி, மாயனூர், ரெங்கநாதபுரம் பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு காவிரிப் பாசன நிலங்களுக்கு விதிக்கப்படும் தீர்வையைப் போல விதிக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) இல்லை. அந்த நிலங்களுக்கு தமிழ்நாடு பாசன தண்ணீர் தீர்வை சட்டம் 1865 (தமிழ் நாடு சட்டம் VII, 1865)-ன் கீழ் ஏற்பட்ட விதிகளின் படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அமராவதி பாசனப் பகுதியில் ஒருசில கிராமங்களுக்கு இருபது மடங்கு தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது கூடுதலாகும். ஆகவே, ஐந்து மடங்கு மட்டும் விதித்தால் போதும் என மக்களிடமிருந்து, குறிப்பாக விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் ஏதாவது வந்துள்ளதா? அதன் மீது எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இரண்டு நாட்களுக்கு முன்புதான் சேலம் மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட அந்தச் சலுகைகள் திருச்சி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன என்று முன் கேள்விக்கே பதில் சொன்னேன்.